**<u>சுருக்கம்</u>**

செவிலியர் நிர்வாகம் – ஒப்பந்த அடிப்படை செவிலியர்கள் பணி நியமனம் வழங்கிய போது பணியில் சேராதவர்கள் (ம) பணியில் சேர்ந்த பின்னர் பணியில் இருந்து தன்னிச்சையாக நின்றுவிட்டவர்கள் –மீண்டும் பணி நியமனம் கோருதல் – மீண்டும் பணி நியமனம் வழங்க வழிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத் (சி1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.350

நாள்.21.10.2009
திருவள்ளுவர் ஆண்டு 2040
ஐப்பசி 04ம் நாள்.

படிக்க:

1. அரசு கடித (நிலை) எண்.235, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.18.07.2008.
2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கடித ந.க.எண்.6961/செ1/2/2007, நாள்.19.6.2009 மற்றும் 29.7.2009.

*****

**<u>ஆணை</u>**

தற்போதுள்ள நடைமுறையின்படி தமிழ்நாடு அரசு செவிலியர் பயிற்சி பள்ளியில் தேர்வு பெற்ற செவிலியர்களுக்கு மட்டும் அவர்கள் பெற்ற மதிப்பெண் மற்றும் இன சுழற்சி அடிப்படையில் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரால் செவிலியர் பதவியில் முதலில் தொகுப்பூதியத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குப் பின் காலமுறை ஊதியத்தில் பணிநியமனம் வழங்கப்படுகிறது.

2. மேலே பார்வை இரண்டில் படிக்கப்பட்ட தனது கடிதங்களில், செவிலியராக பணி நியமனம் வழங்கப்பட்ட பிறகும், பணியில் இணையாத மற்றும் பணியில் சேர்ந்த பின் தன்னிச்சையாக பணிக்கு வராமலிருந்து மீண்டும் பணி நியமனம் கோரும் 62 (58+4) செவிலியர்களின் விவரங்களை அரசுக்கு தெரியப்படுத்தி அவர்களுக்கு மீண்டும் பணி நியமனம் வழங்குவது குறித்து அரசின் அறிவுரையை மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் வேண்டியுள்ளார்.

3. அரசு செவிலியர் பயிற்சி பள்ளியில் படிக்கும் மாணவர்கள், படிப்பு முடித்த பிறகு அரசு மருத்துவமனைகளில் 3 ஆண்டுகள் கட்டாயமாக பணியாற்ற வேண்டுமென ஒப்பந்தத்தில் கையொப்பம் பெறப்படுகிறது. அதற்கேற்ப அவர்களுக்கு உதவித்தொகையும் வழங்கப்படுகிறது. மாணவர்கள் தேர்ச்சி பெற்று ஆறு மாதங்களுக்குள் அரசு செவிலியர் பணி வழங்கப்பட்டும் பணியில் இணையாது இருந்தால், இவர்கள் பயிற்சியின் போது பெற்ற உதவித் தொகையினை திருப்பி செலுத்தப்பட வேண்டும் என்ற விதி உள்ளது. ஆனால், தற்போது

பணிநியமனம் அளித்தும் பணியில் சேராமல் இருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். இவ்வாறு பணியில் சேராமலிருந்து விட்டு தன் விருப்பத்திற்கேற்ப பணிநியமனம் கோருவதும், அதற்கு அனுமதி அளிப்பதும் தவறான முன் உதாரணமாகவே கருத வேண்டிவரும். மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரும் மேலே இரண்டில் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் பணி நியமனம் கிடைத்தும் வெளிநாடு சென்று வந்து மீண்டும் எப்பொழுது வேண்டுமானாலும் பணியில் சேரலாம் என்ற எண்ணம் உருவாவதற்கு வாய்ப்பு உள்ளது என்று குறிப்பிட்டதுடன், இந்நேர்வில் தெளிவான வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குமாறு அரசை கோரியுள்ளார்.

4. அரசு இந்நேர்வினைக் கவனமுடன் பரிசீலித்து, இதுபோன்ற நிகழ்வுகளில் கீழ்காணும் நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று அரசு ஆணையிடுகிறது:

1. முதன் முதலாக பணி நியமனம் பெறும் தனியர், பணி நியமன ஆணை பெற்றபின், பணியில் சேர முடியாததற்கான நியாயமான (குடும்ப சூழ்நிலை, திருமணமாகி வெளிமாநிலம், வெளிநாட்டில் இருப்பது போன்ற) காரணங்களை பணி நியமன ஆணை கிடைத்த 30 நாட்களுக்குள் சுட்டிகாட்டி, பின்னர் ஒரு வருடத்திற்குள் பணியில் சேர விருப்பம் தெரிவித்தால், தனியர் சுட்டிகாட்டும் காரணங்களை ஆதாரத்துடன் பரிசீலித்து மீண்டும் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணிநியமன ஆணை வழங்கப்படலாம். மேலே குறிப்பிட்ட காலவரையிலான 30 நாட்களுக்கு மேல் கிடைக்கப்பெறும் கடிதங்களை முழுமையாக நிராகரிக்க வேண்டும்.
2. சொந்த விருப்பத்தின் பேரில் தமிழக அரசின் பணி நியமன ஆணை கிடைப்பதற்கு முன்பே வெளிநாட்டில் பணி நியமனம் பெற்றிருந்தாலும், அரசின் பணிநியமன ஆணை கிடைக்கப்பெற்ற ஒரு வருடத்தில், பணியில் சேர விருப்பம் தெரிவித்தால் தனியருக்கு மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மீண்டும் பணி நியமன ஆணை வழங்கலாம்.
3. பணிநியமன ஆணை கிடைக்கப்பெற்று மருத்துவ ரீதியிலான காரணங்களால் ஒரு வருடத்திற்குள், பணியில் சேராமல், பின்னர் பணி நியமனம் கோரும் நேர்வுகளில் தனியரை முழு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி, தனியரால் செவிலியர் பணியினை முழுமையாக செய்ய முடியும் என்று மருத்துவ குழு சான்றளித்தால் மட்டுமே மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் மீண்டும் பணிநியமன ஆணை வழங்கலாம்.
4. முதன் முதலாக பணி நியமன ஆணை பெற்று மேலே பத்தி–4(1)ல் ஆணையிடப்பட்டுள்ளவாறு பணியில் சேராததற்கான காரணத்தை உடனடியாக குறிப்பிடாமல் (அதாவது பணிநியமன ஆணை கிடைத்த 30 நாட்களுக்குள்) பின்னாளில், பணி நியமன ஆணை கோரும் தனியரின் கோரிக்கையை முழுமையாக நிராகரிக்க வேண்டும்.
5. குழந்தை வளர்ப்புக் காரணங்களை காட்டும் கோரிக்கைகளை நிராகரிக்க வேண்டும்.
6. பணிநியமன ஆணை கிடைத்த பின்பு வெளிநாட்டிற்கு பணிக்காக சென்று பின்பு மீண்டும் மறு நியமன ஆணை கோரும் கோரிக்கைகளை நிராகரிக்க வேண்டும்.
7. பணி நியமன ஆணை பெற்று பணியில் சேர்ந்தபின், எவ்வித தகவலும் இன்றி தன்னிச்சையாக பணிக்கு வராமல் இருந்து பின்னர் மீண்டும் பணிநியமனம் கோரும் கோரிக்கைகள் முழுமையாக நிராகரிக்க வேண்டும்.

8. பணியில் இணைந்து, பின் தன்னிச்சையாக பணிக்கு வராமலிருக்கும் தனியர்களை உடனடியாக பணி நீக்கம் செய்தல் வேண்டும்.

5. மேற்கூறிய வழிமுறைகளின் அடிப்படையிலும் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையிலும், பார்வை 2ல் படிக்கப்பட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் கடிதங்களில் குறிப்பிட்டுள்ளபடி 62 தனியர்களின் கோரிக்கை மற்றும் எதிர்காலத்தில் வரும் இதுபோன்ற கோரிக்கையினை ஆய்வு செய்து பணி நியமன ஆணை வழங்குமாறு மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

வி.கு.சுப்புராஜ்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–6.
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–10.
பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர், சென்னை–6.
நகல்
அரசு கடித நிலை எண்.235, மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்துறை, நாள்.18.7.2008.
இ.கோ/உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.